www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# தமிழிற் தரிப்புக்குறிகளின் பயன்பாடு

சி.சிவசேகரம்

படிப்பகம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தமிழிற் தரிப்புக்குறிகளின் பயன்பாடு

சி.சிவசேகரம்

படிப்பகம்

**தமிழிற்**
**தரிப்புக்குறிகளின்**
**பயன்பாடு**

முதற் பதிப்பு: ஏப்ரல், 1994
வெளியீடு: எக்ஸில்
27, RUE JEAN MOULIN
92400 COURBEVOIE
FRANCE
அட்டை
வடிவமைப்பு: கிருஷ்ணராஜா

THAMILIT
THARIPPUKURIKALIN
PAYANPADU

FIRST EDITION: APRIL, 1994
PUBLISHED BY: EXIL
27, RUE JEAN MOULIN
92400 COURBEVOIE
FRANCE
COVER DESIGN: KRISHNARAJAH

# முன்னுரை

சமுதாயத்தின் வளர்ச்சி மொழியைப் பாதிக்கிறது. சமுதாய வளர்ச்சியிலும் மாற்றத்திலும் மொழி ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு மொழி அதன் சமுதாய வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கத் தவறும்போது தன் மரணத்தை எதிர் நோக்குகிறது. குருட்டுத் தனமாகப் பழமை பேணுவோர் மொழி வளர்ச்சியை மறித்து அதன் மூலம் மொழியைச் சாகடிக்கத் துணைபோவோராவர். மொழிபற்றிய கொள்கை வெறுமனே நோக்கஞ் சார்ந்ததல்ல. நடை முறையே மொழியின் வளத்தையும் வளர்ச்சியையும் நிர்ணயிக்கிறது. தமிழின் மேம்பாட்டை அதன் தொன்மையிலும் அதன் பழைய இலக்கியங்களிலுமே தரிசிப்போர் அது நவீனத்துவத்தின் தேவைகட்கு எவ்வாறு முகங்கொடுக்கக்கூடும் என்பதைப் பற்றி அதிகங் கவனங்காட்டுவதில்லை. அதே வேளை, நவீனத்துவம் என்ற பேரில் அயலிலிருந்து வருவ

னவற்றைக் கண்மூடித்தனமாக தமிழ்மீது திணிக்கும் ஒரு போக்கும் உள்ளது. இது தமிழின் எளிமையினதும் தெளிவினதும் வலிமையை இல்லாதொழிக்கும் ஒரு முனைப்பு. ஒரு புறம் அந்நிய மோகமும் மறுபுறம் அறியாமையும் இதற்கு ஆதாரமாக நிற்கின்றன. நெறிப்படுத்தப்படாத முறையிற் தமிழில் அயற் சொற்களையும் சொற்றொடர்களையும் புகுத்துவதாற் தமிழின் சொல்வளம் பெருகிவிடாது. அயற் பாதிப்புகளைச் சமகாலத் தமிழ் தன் தேவைகட்கும் தமிழின் தன்மைக்கும் ஏற்றவிதமாகவே உள்வாங்கிக் கொள்ளமுடியும்.

பேச்சுத் தமிழ் பிரதிபலிக்கும் சமகாலமொழியின் யதார்த்தமான நிலையை ஆக்க இலக்கியங்கள் ஓரளவுக்கு அங்கீகரித்தன. பேச்சுத் தமிழிற் புகுந்துள்ள அயற் சொற்களைச் செம்மையாகத் தமிழில் எழுத இயலாமையே அங்கு முக்கியமான பிரச்சனையாகவுள்ளது. நவீனத்துவம் தமிழிற் புகுத்தியுள்ள பல வேறு சொல்லாக்க, வாக்கிய அமைப்புப் பண்புகளையும் பற்றிய இலக்கண விதிகள் இன்னமும் தெளிவாக வரையறுக்கப்பட வில்லை. மரபுத் தமிழின் சில பண்புகள் தெளிவு கருதிக் கைவிடப் பட்டுள்ளன. எளிமைப்படுத்தப்பட்ட சொல்லாக்கமும் வாக்கியவமைப்பும் பற்றியும் புதிய வழிகாட்டல்கள் அவசியமாகின்றன. இவ்வாறு சமகாலத் தமிழ் மொழியியலாளர் எதிர் நோக்கும் பணிகள் பல.

எவரும் விரும்பியோ, விரும்பாமலோ தரிப்புக் குறிகள் தமிழுட் புகுந்து விட்டன. முக்கியமான சில தரிப்புக் குறிகளின் பாவனை பற்றிய தெளிவான விதிகள் தமிழ் மொழியைக் கற்பிப்போராற் போதிக்கப்படுகின்றன. ஆயினும் ஆங்கிலத்திற் தரிப்புக் குறிகளின் பாவனைக்குத் தரப்படும் முக்கியத்துவம் தமிழிற் தரப்படுவதாகத் தெரியவில்லை. இக்காரணத்தாற் தரிப்புக் குறிகள் தமிழுக்கு வழங்கியுள்ள ஒரு புதிய பரிமாணம் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

இச் சிறு நூலை முதலிற் கட்டுரையாக எழுத முனைந்தபோது, எழுத்தாளரிடையே தரிப்புக் குறிகளின் பிரயோகம் பற்றிய அறியாமை காரணமாக ஏற்படும் தவறுகளை மட்டுமே மனதிற் கொண்டிருந்தேன். கட்டுரையை எழுதும்போது தரிப்புக் குறிகள் தமிழுக்குத் தந்துள்ள புதிய சாத்தியப்பாடுகள் மேலுந் தெளிவாயின. இவை மேலும் விருத்திசெய்யத் தக்கன. ஐரோப்பியத் தமிழ் எழுத்தாளர் நடத்தும் 'இலக்கியச் சந்திப்பு' நிகழ்ச்சித் தொடரின் 15வது சந்திப்பில் இதுபற்றி எழுதிய கட்டுரையைக், கட்டுரைக்குரிய விஷயத்தின் முக்கியத்துவம் கருதி, நூலாக்குமாறு நண்பர்கள் சிலர் கேட்டுக்கொண்டதால், அதை இங்கு மேலும் விரிவுபடுத்திச் சிறு நூலாக்கியுள்ளேன்.

தமிழ் எழுத்துத் தரிப்புக் குறிகளை உள்வாங்கிக் கொண்டபோது **full stop (.)** என்பதை முழுத்தரிப்பு எனவும் **question mark (?)** என்பதைக் கேள்வி அடையாளம் எனவும் **exclamation mark(!)** என்பதை ஆச்சரியக்குறி எனவும் **semi-colon(;)** என்பதை அரைத்தரிப்பு எனவும் **comma(,)** என்பதைக் காற் தரிப்பு எனவும் பேரிட்டனர். இவற்றுள் **semi-colon, comma** என்பனவற்றின் தமிழ்ப் பேர்கள் தரிப்பின் காலஅளவைச் சரிவரக் குறிப்பன என்று கூறவியலாது. **comma** வுக்குரிய காலம் முழுத்தரிப்பின் அரைவாசி எனலாம். **semi-colon** அவையிரண்டிற்கும் இடைப்பட்டது. இவ்வகையில், **comma**வை அரைத்தரிப்பெனவும் **semi-colon**ஐ முக்காற் தரிப்பெனவும் சொல்வது பொருந்தும். (தமிழ் மரபில் உள்ள அரைத்தரிப்பு என்ற சொல் **semi-colon** என்பதில் வரும் **'semi'** என்ற முற்கூற்றினின்று பெறப்பட்டிருக்கக்கூடும் என்பது என் ஊகம். இதுவே அதனிலும் நீளம் குறைந்த தரிப்பிற்குக் காற்தரிப்பு என்று பேரிடக் காரணமாக இருக்கலாம்). இப்பிரச்சினையைத் தவிர்க்குமுகமாக, **comma**வைக் குறுந்தரிப்பெனவும் **semi-colon**ஐ நெடுந்தரிப்பெனவும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

ஏனைய தரிப்புக்களின் பேர்கள் பெருமளவும் அவற்றின் பயன்பாட்டை உணர்த்துமாறே உள்ளன.

பெரும்பாலான தரிப்புக்குறிகள் பற்றிய விளக்கக் குறிப்புகளையிட்டுக் கடுமையான கருத்து வேறுபாடு இராது என நம்புகிறேன். ஒரு சில பற்றிச் சர்ச் சைக்கு இடமுண்டு. தமிழ் மொழியின் அமைப்புத் தொடர்பான வேறுபட்ட நோக்குச் சார்ந்த இக் கருத்து வேறுபாடுகள் தவிர்க்க இயலாதவை. இந் நூலிலுள்ள விளக்கங்கள், தமிழ் மொழியின் சம கால எழுத்து நடையையும் அதன் முனைப்பையும் கருத்திற்கொண்டு, தமிழிற் தெளிவாகவும் குழப்ப மின்றியும் எழுதத் தரிப்புக்குறிகள் எவ்வாறு உதவ முடியும் என்ற நோக்கத்திலேயே தரப்பட்டுள்ளன. இவை மேலும் விரிவுபடுத்தப்படக் கூடும். ஆயி னும், நூலின் அளவும் அதன் பயன்பாட்டின் வசதி யுங் கருதி விளக்கங்கள் அதிகம் விரிவாக்கப்பட வில்லை.

சொல்லாக்கம், வாக்கியவமைப்பு, பந்தியமைப்புத் தொடர்பான சில கேள்விகளும் இங்கு எழுகின்றன. அவை பற்றி இங்கு விபரிக்க முற்படின் நூலின் நோக்கம் மிகவும் மாறிவிடும் என்பதால் அவை பற்றி எழுதப்படவில்லை.

இறுதியாக இம் முயற்சியை நூல்வடிவமாக்குமாறு, என்னைத் தூண்டிய பலவேறு நண்பர்களுக்கு என் நன்றி. அதற்கான நடவடிக்கைகளில் முன்நின்ற லக்ஷ்மியையும் கலைச்செல்வனையும் கிருஷ்ண ராஜாவையும் பேர் குறிப்பிட்டுச் சொல்வதால் மற்றவர்களது ஊக்குவிப்பின் பங்கைக் குறைவாக மதிப்பிட முடியாது. நூலின் அச்சுப் பதிவில் உத விய மாலாவிற்கும், அச்சிட்ட SET LINE DATA LTD. அச் சகத்தாரிற்கும் பிரசுரித்த EXILக்கும் எனது நன்றி.

சி.சிவசேகரம்

# தமிழிற் தரிப்புக் குறிகளின் பயன்பாடு

## 0. அறிமுகம்

பழந்தமிழுக்குத் தரிப்புக் குறிகள் தேவைப்படவில்லை. இன்றுந் தரிப்புக்குறிகளின் துணையின்றித் தெளிவாகத் தமிழில் எழுத முடி யும். ஆயினும் தரிப்புக் குறிகளின் துணையின்றித் தமிழில் எழுதப்ப டும் எல்லா விஷயங்களையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடி யாது.

தமிழ் அயலிலிருந்து பல விஷயங்களைச் சுவீகரித்துள்ளது. இவற் றின் விளைவாக அதன் ஆற்றல் மிகவும் அதிகரித்தது. சிக்கலான புதிய வாக்கிய அமைப்புக்கள் தமிழிற் சாத்தியமாயின. சிக்கலான புதிய அமைப்புக்கள் கருத்துக் குழப்பத்திற்குக் காரணமாக இட மேற்பட்டது. இத்தகைய குழப்பங்களைத் தவிர்க்கத் தரிப்புக்குறிகள் தமிழுக்கும் அவசியமாயின. இத் தரிப்புக்குறிகள் தமிழர் தமிழுக் காகத் தோற்றுவித்தனவல்ல. நவீனத்துவம் தமிழுக்கு அறிமுகஞ் செய்த பலவற்றைப் போன்று தரிப்புக் குறிகளும் ஆங்கில வாயி லாகவே தமிழை வந்தடைந்தன.

ஆங்கிலவாயிலாக நாமறிந்த சொற்களைத் தமிழில் எழுதுகையில் நாமறிந்த ஆங்கில ஒலியையொட்டியே எழுதுகிறோம். அவ்வாறே ஆங்கில மூலம் நாமறிந்த தரிப்புக்குறிகளையும்ஆங்கில நடைமுறை யையொட்டியே பயன்படுத்த முற்பட்டோம். ஆங்கிலச் சொல் உச் சரிப்புக்களிற் போலன்றி, ஆங்கில எழுத்திற் தரிப்புக்குறிகள் எவ் வாறு பயன்படக்கூடும் என்பதற்குத் தெளிவான வழிகாட்டல்கள் உண்டு. பெருவாரியான ஐரோப்பிய மொழிகளிலும் இவ்வழிகாட் டல்கள் குறிப்பிடத்தக்க ஒருமையுடன் பயன்படுகின்றன என்று நம்பு கிறேன். ஸ்பானிய மொழியில் வினாக்குறி பயன்படும் முறை விலக கல்கட்கு ஒரு உதாரணமெனினும், அடிப்படையான வேறுபாடு என்று அதிகம் இலலை.

தமிழிற் தரிப்புக்குறிகளின் பிரயோகம் பற்றி இங்கு தரப்படும் விளக்கங்கள் மரபுசார்ந்த மொழியின் அடிப்படையில் எழுதப் படவில்லை. சமகால எழுத்தின் அடிப்படையில் ஆக்க இலக்கியத்தையுங் கருத்திற் கொண்டே இவ் விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன. இக்கட்டுரையின் மொழிநடையிலும் மரபு மீறப்படுகின்றது. இம்

படிப்பகம்

மீறல்கள் சமகால மொழியின் முனைப்பையுந் தேவையையுங் கருத்திற் கொண்டே நேர்ந்துள்ளன.

தரிப்புக்குறிகளில் முழுத்தரிப்பும் (.) வினாக்குறியும் (?) வியப்புக்குறியும் (!) எப்பொதுமே வாக்கியங்களின் முடிவில் வருவன என்பது பொதுவான ஒரு நியதி. மேற்கோட் குறிகளில் ஒற்றை மேற்கோட்குறி (' ') இரட்டைமேற்கோட்குறியினின்றும் (" ") வேறுபட்ட முறையிற் சமகால ஆங்கிலத்திற் பயன்படுகிறது. அடைப்புக்குறிகளின் வேறுபட்ட வடிவங்கள் வெவ்வேறு தேவைகட்காகப் பயன்படுகின்றன. வளைவான அடைப்புக்குறியே () பரவலான பாவனையில் உள்ளது. சதுரஅடைப்புக்குறி [] விசேடமான தேவைகட்குப் பயன்படுகிறது. நெடுந்தரிப்பு (;) குறைவாகப் பயன் படும் ஒரு அடையாளம் என்பதால் அதன் பாவனை பற்றிய தெளிவீனம் உண்டு. விளக்கக்குறி (:) பற்றிய நிச்சயமின்மை குறைவாயினுந் தமிழில் இது நெடுந்தரிப்புடன் குழப்பப்படுவதைக் காண முடியும். பல வேறு தேவைகளை நிறைவு செய்யும் ஒரு கருவியாக உள்ள குறுந்தரிப்பே (,) ஆங்கிலத்தில் அதிகமாகப் பயன்படும் தரிப்புக் குறியாகும். தமிழில் இதன் பிரயோகத்திலுள்ள தெளிவீனங்களுக்கு இக்குறியின் பன்முகப் பயன்பாடு ஒரு முக்கிய காரணமாகும்.

ஐயத்திற்கு இடமே இருக்கக்கூடாத பிரயோகத்தையுடைய வினாக்குறி, ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகைகளில் அடிக்கடி தவறாகப் பாவிக்கப்படுகிறது. வாக்கியங்களின் நடுவில் இதை நாம் அடிக்கடி காணலாம். வியப்புக்குறியும் தேவையின்றிப் பயன்படுவதுண்டு. இதன் துர்ப்பிரயோகத்தைக் கொட்டை எழுத்துத் தலையங்கங்களில் அதிகங் காணலாம். இத்தவறுகள் நிவர்த்திக்க எளியன. எனவே முதலில் வாக்கியங்களின் முடிவில் வரும் குறிகளை முதலிற் பார்ப்போம்.

### 1. முழுத்தரிப்பு அல்லது புள்ளி (.)

ஒரு வாக்கியம் கேள்வியாகவோ விளிப்பாகவோ வியப்பைக் குறிப்பதாகவோ அமையாதவிடத்து அதன் முடிவில் முழுத்தரிப்பு இடப்படும். கீழ் வரும் உதாரணங்களைக் கவனிக்கவும்.

நேற்று வந்தது இன்று வரவில்லை.
நேற்று வந்தது. இன்று வரவில்லை.

2. விழுந்து கிடந்தது மான் கொம்பு. வளர்ந்து திரிந்தது மாடு.
விழுந்து கிடந்தது மான். கொம்பு வளர்ந்து திரிந்தது மாடு.

3. மரக்கிளைகள் ஆடின காற்றில். மலரிதழ்கள் பறந்தன.
மரக்கிளைகள் ஆடின. காற்றில் மலரிதழ்கள் பறந்தன.
மரக்கிளைகள் ஆடின காற்றில் மலரிதழ்கள் பறந்தன.

முதல் உதாரணத்தில் முழுத்தரிப்பு இடப்படுவதோ விடப்படுவதோ சொல்லப்பட்ட விஷயத்தை மாற்றி விடுகிறது. நேற்று வந்த ஒன்று இன்று வரவில்லை என்பதும் ஏதோ ஒன்று நேற்று வந்தது ஆனால் இன்று வரவில்லை என்பதும் வராத பொருளை வெவ்வேறு விதமாக அடையாளம் காட்டுகின்றன. இரண்டாம் உதாரணத்தில் முழுத்தரிப்பு வருகிற இடம் இரண்டு வாக்கியங்களையும் மாற்றி விடுகிறது. மூன்றாவதில் முதல் முழுத்தரிப்பை இடுகிற இடத்தை மாற்றியும் அதை இடாமலும் கருத்தை மாற்ற முடிகிறது. 'மரக் கிளைகள் ஆடின காற்றில்' என்ற சொற்றொடர் ஒரு வசனமாகும் போது, வசன முடிவில் வரவேண்டிய வினைச்சொல்லான 'ஆடின' வசன நடுவில் வருகிறது. இது விரும்பத்தக்கதோ இல்லையோ, மொழிவழக்கில் இத்தகைய வாக்கிய அமைப்புக்கள் இருக்கின்றன.

மரபுத் தமிழில் ஒரு வாக்கியத்திற்கு ஒரு வினைச் சொல்லே இருக்க முடியும். அது தோன்றா வினையாகவும் இருக்கலாம். 'இந்த மரம் பச்சை' என்ற வாக்கியத்தில் 'ஆகும்' என்ற வினைச்சொல் 'பச்சை' என்ற சொல்லின் பின் தோன்றாது நிற்கிறது. புதிய எழுத்து நடைகள் உருவாக்கும் பிரச்சனைகளின் தீர்வுக்குத் தரிப்புக்குறிகளின் கவனமான பிரயோகம் உதவுமெனினும் கவனமான சொற்பிரயோகமும் வாக்கிய அமைப்பும் முக்கியமானவை. புள்ளிக்கு வேறு பயன்களும் உள்ளன.

எண்களின் தசம பின்னத்தைக் காட்டவும் திகதியின் நாள், மாத, வருட அலகுகளையும் பணத்தின் பெரிய, சிறிய அலகுகளையும் பிரித்துக் காட்டவும் புள்ளியிடப்படுகிறது. உதாரணங்கள்: 1.5 மீற்றர் உயரம்; 01.05.1993; மாலை 6.30 அல்லது 18.30 மணி; விலை ரூபா 99.99.

சிலவேளைகளில் ஒரு பட்டியலை அடையாளங்காட்டும் எண்கட்கும் எழுத்துக்கட்கும் பின் புள்ளியிடப்படுகிறது. இது பட்டியலை அடையாளங் காட்டும் எண்ணையோ எழுத்தையோ பட்டியலில் உள்ள

விஷயத்துடன் குழப்பாதிருக்க உதவும். உதாரணம்: அ. கட்டுரைத் தலைப்பு; ஆ. கட்டுரையாளரின் பெயர்; இ. கட்டுரையின் சுருக்கம்.

சொற்களைச் சுருக்கி எழுதும்போது, அவற்றின் முடிவிற் புள்ளியிடப்படும். ஆங்கிலத்தில் ஒரு சுருக்கப்பட்ட வடிவம் சொல்லின் கடைசி எழுத்தை உள்ளடக்குமாயின், சில வேளை, புள்ளியிடப்படுவதில்லை. புள்ளி இடுவதோ இடாமல் விடுவதோ வழமைக்கேற்பவே செய்யப்படுகிறது. புள்ளி, ஒரு சொல் சுருக்கப்பட்டுள்ளது எனத் தெளிவாகக் காட்டுகிறது.

இவ்விஷயத்தில் ஆங்கில முறையைத் தமிழுக்கு நீடிப்பது அப்படியே சாத்தியமில்லை. ஏனெனில், தமிழின் எழுத்துமுறை ஆங்கிலம் போன்று தனி ஒலியன்களின் குறியீடுகளானதல்ல. எனவே, ஒரு சொல்லின் முதலெழுத்தும் இறுதியெழுத்தும் வரும் சுருக்கப்பட்ட வடிவங்கள் தமிழ் வழக்கில் அதிகமில்லை. ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரையும், இந்நூற்றாண்டின் முற்பகுதியிலுங்கூட, இத்தகைய சுருக்கப்பட்ட வடிவங்கள் சில, கையெழுத்துச் சுவடிகளிலும் அச்சிலும் இருந்தன. மேற்படி, அவர்கள் போன்ற சொற்களின் முதலாவது எழுத்தையும் இறுதியெழுத்தையும் சேர்த்து இச்சுருக்கப்பட்ட வடிவங்கள் அமைந்தன. இன்று வழக்கிலுள்ள ஒரு உதாரணம், 'உதாரணம்' என்ற சொல்லைக் குறிக்கும் 'உ+ம்' என்ற வடிவமாகும். இதன் முடிவிற் புள்ளியிட அவசியமில்லை.

வழமை சார்ந்த சில உதாரணங்கள்: ஐ.தே.க.; ஜே.வி.பி.; ரூ. 99.99; திரு. சோம. லெட்சுமணன்; ஈ.வே.ரா.

சுருக்கப்பட்ட வடிவங்கள் வசனமுடிவில் வந்தால் மேலதிகமாகப் புள்ளி இடப்படுவதில்லை. வேற்றுமை உருபுகளுடன் சுருக்கப்பட்ட வடிவம் இணையும் போது கடைசிப்புள்ளி தவிர்க்கப்படலாம். உதாரணம்: எழுபத்தேழில் ஜே.வி.பியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற கட்சி யூ.என்.பியாகும். இங்கு ஜே.வி.பி., யூ.என்.பி. என்ற சுருக்கங்களின் முடிவிலான புள்ளிகள் தவிர்க்கப்பட்டுள்ளன. புள்ளியைத் தவிர்த்தல் தெளிவீனத்திற்கு வழிகோலுமாயின் அதைப் பேணல் அவசியமாகலாம். உதாரணமாக, 'அ.நா.கவின் மிக்க பாங்கான கட்டுரை' என்ற சொற்றொடரை அ.நா.க. என்பவரது பாங்கான கட்டுரையென்று கொள்வோமா? அல்லது, அ.நா. என்பது கவின் மிக்க பாங்கான கட்டுரை என்போமா? 'அ.நா.' என்ற தொடரின்பின் இடைவெளி வரின் பின்னைய பொருள் மட்டுமே கொள்ளப்படலாம். தமிழ் எழுத்திலும் அச்சிலும் வரும் தவறுகளைக் கணிப்பிற் கொண்டால் அ.நா.க. என்பவருடைய கட்டுரை என்பதைத் தெளிவாக்க விரும்புகிற ஒருவர் 'க' என்ற எழுத்தின் பின்னும் புள்ளியிடுவது தகும்.

ஒரு வாக்கியத்தை மேற்கோள் காட்டும்போது நீளங்கருதி அதில் ஒரு பகுதி விடப்பட்டால் மூன்று புள்ளிகளால் அதை அடையாளம் காட்டலாம். விடப்பட்ட பகுதி வாக்கிய முடிவில் வந்தால் நான்கு புள்ளிகள் வரும். எனவே ஒரு பந்தியில் ஒரு வாக்கியமோ அல்லது அதன் கடைசிப் பகுதியோ விடுபட்டால் நான்கு புள்ளிகள் இடப்படும். உதாரணம்: "முயல் ஓடுவதைக் கண்ட ... மூடர்கள் அது குதிரைக்குஞ்சென்று ...."

## 2. வினாக்குறி (?)

தமிழில் வினாபற்றிய இறுக்கமான இலக்கண விதிகள் உள்ளன; "எ, யா முதலும் ஆ, ஓ ஈற்றும் எ இருவழியும் வினாவாகுமே" என்ற விதி எத்தகைய சொற்களைக் கொண்டு வினாக்களை அமைக்கலாம் என்று கூறுகிறது. எவர், யாது, இவரா, அதுவோ, ஏன், உவரே ஆகிய சொற்கள் வினாப்பாங்கை உடையன. இவையில்லாமலும் வினாக்களை அமைக்கும் வசதியை வினாக்குறி ஏற்படுத்தியுள்ளது. குரலின் ஏற்றத்தின் மூலமே ஒரு வாக்கியத்தை வினாவாக்கும் முறை ரஷ்ய மொழியில் உண்டு. வினாக்குறி இதை எழுத்திற் சாத்தியமாக்குகிறது. இன்று, பல மொழிகளிலும் ஒரு சாதாரண வாக்கியத்தை ஒரு வினாக்குறி மூலம் ஒரு வினாவாக்க முடியும். பின்வரும் உதாரணங்களைக் கவனியுங்கள்.

1. அப்படி அவர் சொன்னார்?
2. மழை பெய்கிறது?
3. பேர்? விலாசம்?
4. இது ஒரு வீடு?

முதல் இரண்டு உதாரணங்களிலும் தெரிவிக்கப்பட்ட ஒரு தகவல் பற்றிய ஐயத்தை தெளிவுபடுத்தும் நோக்கிற் சாதாரண வசனங்கள் கேள்வியின் தொனியில் வருகின்றன. மூன்றாவதில் 'என்ன' என்ற சொல் இரண்டு கேள்விகளிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. இவை,

சிலசமயம், கேள்வி விளங்கவில்லை என்பதாலோ கேள்வி என்னவென நிச்சயப்படுத்தவோ ஒருவர் திருப்பிக் கேட்பனவாக இருக்கலாம். நான்காவதில் "இதுவும் ஒரு வீடா?" என்று கேட்குந் தொனியை உணரலாம்.

மேற்கூறியவிதமான பிரயோகங்கள் தவிர்ந்தால், வினாக்குறியின் பிரயோகம் சிக்கலுக்குரியதல்ல. ஆயினும், வினாக்குறி பலராலும் தவறாகப் பிரயோகிக்கப்படுகிறது.

புலம்பெயர்ந்த சஞ்சிகைகளில் வாக்கியங்களின் நடுவில் வினாக்குறி வருவது அதிகம். இது வாக்கியத்தின் தன்மை பற்றிய தெளிவீனத்தின் விளைவானது. சில சமயங்களில் மூலத்தில் இல்லாத வினாக்குறி அச்சில் வந்துவிடுகிறது. கீழ்வரும் உதாரணம் இதன் விபரீதமான ஒரு விளைவை விளக்க உதவக்கூடும்.

> "சிறையிலடைத்து விடுவார்களோ? என்றும் அவனுக்குக் கவலையாயிருந்தது".

மேற்படி வாக்கியத்தில் வரும் அவசியமற்ற வினாக்குறி இரண்டு வாக்கியங்களை உருவாக்கி மூலத்தின் பொருளையே சிதைத்து விடுகிறது. வினாவைக் குறிக்கும் ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னாலும் வினாக்குறி வரவேண்டுமாயின், பின்வருமாறான வகையில் அபத்தமான வாக்கியங்களையும் நாம் அனுமதிக்க வேண்டும்:

> "யார்? என்ன? சொன்னாலும் அதை ஏன்? என்று கேளாமல் என்றோ? எவரோ? உன்னைப் பேயனாக்க வழிதேடுகிறாய்".

வினாக்குறி ஐயத்தைக் குறிக்க வாக்கியங்களின் நடுவே, பொதுவாக அடைப்புக்குறிக்குள், வரலாம். உதாரணமாக, "இந்திய அமைதி காக்கும் (?) படை முடிவிற் திரும்பிப் போனது".

எவ்வாறாயினும் இத்தகைய பிரயோகம் அளவு மீறுமாயின் அலுப்பூட்டும். அது மட்டுமின்றி, ஒரு படைப்பின் கனதியை இக்குறியின் மிகையான பிரயோகம் ஓரளவு குறைத்துக் காட்டவும் இடமுண்டு.

**3. வியப்புக்குறி அல்லது விளிப்புக்குறி (!)**

விளிப்பை அடையாளங் காட்டவே இக்குறி முக்கியமாகப் பயன்



படுகிறது. ஒருவரைக் கூவி அழைக்கும்போதோ, எவருக்கேன் ஆணையிடும்போதோ உள்ள தொனியின் தன்மையை இக்குறி அடையாளங் காட்டுகின்றது. கோஷங்களை அடையாளங் காட்டவும் விளிப்புக்குறி பயன்படலாம். இவற்றை விளக்கக் கீழ்வரும் உதாரணங்கள் போதுமானவை.

1. ஏய்! போகாதே, நில்!
2. அரோகரா!
3. அடக்குமுறை ஒழிக!
4. யாரைப் பார்த்துக் கதைக்கிறீர்!
5. இதென்ன கதை!

கடைசி இரண்டு உதாரணங்களிலும், வழமையாகக் கேள்விகளாக வரும் வாக்கியங்கள் மறுப்பைத் தெரிவிக்கப் பயன்படுகின்றன. இவை கேள்வியின் தொனியில் வரவில்லை என்பதைத் தெளிவாக்க வியப்புக்குறி உதவுகிறது.

"ஏய்! போகாதே, நில்!" என்பது "ஏய், போகாதே, நில்." என்பதைவிடத் தன்மையில் வேறுபட்டது. இவ்வகையில் ஆக்க இலக்கியத்தில் வியப்புக்குறி மிக அவசியமானது. "அமைதியையே நாங்களும் வேண்டுகிறோம் என்று போராளிகளும் சொல்கிறார்கள்." என்ற வாக்கியத்தின் கருத்து முழுத்தரிப்பின் இடத்தில் வியப்புக்குறியை இடும்போது முற்றாக மாறிவிடும். வியப்புக்குறி அங்கு ஐயத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.

வினாக்குறி போன்று தவறாக விளங்கிக் கொள்ளப்படாவிடினும் இக்குறி மிகையான பயன்பாட்டுக்கு உள்ளாவதைக் காணலாம். சிலர் தமது சொற்களுக்கு அழுத்தந் தரும் நோக்கில் வியப்புக்குறியை இவ்வாறு பயன்படுத்துவதுண்டு. உதாரணமாகச் செய்திப் பத்திரிகைகளின் கொட்டை எழுத்துத் தலையங்கங்களைக் குறிப்பிடலாம். தமிழகத்துத் தினத்தந்தியைப் பின்பற்றி, ஈழத்துத் தினபதி, சிவநாயகம் ஆசிரியராக இருந்தபோது பரபரப்பான செய்தித் தலைப்பு என்பதை வலியுறுத்தும் நோக்கில் வரிக்கு வரி வியப்புக் குறிகளை இட்டது. தினத்தந்தியில் ஒருமுறை "நாளை தீபாவளி! பட்டாஸ் பட், படார்!!" என்ற விதமான ஒரு முன்பக்கத் தலைப்பு 1960களில் வந்தது. இது அபத்தத்தின் உச்சநிலை எனலாம். 'பிரேமதாச படுகொலை' என்ற கொட்டையெழுத்துத் தலையங்கத்திற்கு ஒரு வியப்புக்குறியிட்டு "பிரேமதாச படுகொலை!" என்று எழுதுவ

தால் எந்தவிதமான மேலதிக அழுத்தமும் கிடைக்கப் போவதில்லை.

கீழ்வரும் வாக்கியச் சோடிகளைக் கவனியுங்கள்.

1. தம்பி, போகாதே.
   தம்பி, போகாதே!
2. நமக்கு விடுதலை வேண்டும்.
   நமக்கு விடுதலை வேண்டும்!
3. இப்படி அவர்களுஞ் சொன்னார்கள்.
   இப்படி அவர்களுஞ் சொன்னார்கள்!

முதல் உதாரணத்தில் வியப்புக்குறி ஒரு உபதேசத்தை ஆணையாக்கி விடுகிறது. இரண்டாவதில் வியப்புக்குறி ஒரு கருத்தைப் பிரகடனமாக்கி விடுகிறது. மூன்றாவதில் வியப்புக்குறி வழமையாக அவசியமற்றது என்பதால் அது ஒரு விசேட அர்த்தத்தைக் குறிக்கிறது.

வினாக்குறி போன்று வியப்புக்குறியையும் அடைப்புக்கட்கு இடையில் வைக்கலாம். அங்கு வினாக்குறி ஐயத்தையோ மறுப்பையோ சுட்டிக்காட்டும்போது, வியப்புக்குறி கிண்டலாகப் பயன்படுகிறது. உதாரணம்: இலங்கை அரசின் மனிதஉரிமை மீறல்கள் குறைந்துள்ளதாக ஒரு விடுதலை இயக்கம் (!) அறிக்கை விட்டது. இவ்விடத்து வினாக்குறியின் மிகையான பாவனை போன்று வியப்புக் குறியின் மிகையான பாவனையும் எழுத்தைப் பலவீனப்படுத்தக் கூடும்.

### 4. குறுந்தரிப்பு(,)

குறுந்தரிப்பின் பிரயோகங்கள் பல. முழுத்தரிப்பும் வினாக்குறியும் வியப்புக்குறியும் ஒரு வாக்கியம் முடிந்து விட்டது என அறிவுறுத்துவதால், அதை வாசிப்பவர் சிறிது நேரம் தரித்தே அடுத்த சொல்லை வாசிப்பர். குறுந்தரிப்பும் வாசிப்பவரைச் சற்றே இடைநிறுத்துமாறு உணர்த்துகிறது. தெளிவாக வாசிக்கவும் எளிதாக விளங்கவும் உதவும் நோக்கில் இக்குறி பயன்படுவதால், இதன் பயன்பாடு பற்றிய முடிவு பெருமளவுக்கும் எழுதுபவரையே சார்ந்தது.

குறுந்தரிப்பின் பயன்பாட்டை விளங்கிக்கொள்ள அதன் பெறுமானங்களை அதன் செயற்பாட்டின் அடிப்படையில் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆங்கில மொழியில் 'உடன்' அல்லது 'சக' என்ற பொருளிலும் ஒரு அடைப்புக்குறி போன்றுமே குறுந்தரிப்பு பொதுவாகப் பயன்படுகின்றது. சில வேளைகளில் அதாவது என்ற பாங்கிலும் அது பயன்படலாம். இவை யாவுமே தமிழுக்கும் இசைவானவை. எனினும், ஆங்கில வாக்கிய அமைப்பின் விதிகள் எழுவாயையும் பயனிலையையும் ஒற்றைக் குறுந்தரிப்பால் பிரிப்பதை அனுமதியாததுபோற் தமிழில் விதிக்க முடியாது. பல இடங்களில் எழுவாயைப் பயனிலையினின்று குறுந்தரிப்பாற் பிரிப்பது அவசியமாகின்றது. இதுபற்றிக் கவனிக்கு முன்னர், குறுந்தரிப்பின் முற்கூறிய பயன்பாடுகள் பற்றிப் பார்ப்போம்.

முதலில் குறுந்தரிப்புச் 'சக' என்ற பொருளில் வரும் சூழ்நிலைகளைப் பார்ப்போம். பேர்ச் சொற்களும் எழுவாய் விசேடனங்களும் பயனிலை விசேடனங்களும் அடுத்தடுத்து வரும்போது அவற்றை வேறுபடுத்தக் குறுந்தரிப்புகள் பயன்படும். கீழ்வரும் உதாரணங்களைக் கவனிக்கவும்:

1. உமையாள், குமரன், முருகன், ராமன், தேவி, சீதை என்போர் வந்தனர்.
2. வெளிறிய, பச்சைத் துணி.
3. பயந்து, விழுந்து, துடித்து வந்தான்.

முதலாவதிற் குறுந்தரிப்புக்களை நீக்கினால், வந்தோர் எத்தனை பேர், அவர்கள் யார் என்பது தெளிவில்லாது போய்விடும்: உமையாளின் குமரன் முருகனும் ராமனின் தேவி சீதையும் வந்தார்கள் என நாம் நினைக்க முடியும். அல்லது உமையாள் குமரனும் முருகன் ராமனும் தேவி சீதையும் வந்தார்கள் என்றும் இன்னும் பலவேறு விதமாகவும் விளங்கிக் கொள்ள முடியும்.

இரண்டாவதிற் குறுந்தரிப்பு இல்லாது போனால், வாக்கியம், பச்சைத்துணி வெளிறிவிட்டது என்று பொருட்படாது. மாறாக துணியின் நிறம் வெளிறிய பச்சை என்றாகி விடும்.

மூன்றாவதிற் குறுந்தரிப்பை நீக்கினால், பயந்தும் விழுந்து துடித்தும் வந்தான் என்றோ பயந்து விழுந்தும் துடித்தும் வந்தான் என்றோ கருத இடமுண்டு.

மரபுத் தமிழில் இவ்வாறான பிரச்சனையின்றி "உமையாளும் முருகனும் ... சீதையும் வந்தனர்." என்று எழுதலாம். "வெளிறியதும் பச்சை நிறமுடையதுமான துணி" வெளிறிய பச்சைநிறத் துணியி

னின்று வேறுபட்டது. "பயந்தும் விழுந்தும் துடித்தும் வந்தான்." என்ற வாக்கியத்தில் ஐயப்பாட்டுக்கு இடமில்லை.

குறுந்தரிப்பு அனுமதிக்கப்படாத சில அடுக்குக்கள் உள்ளன. உதாரணங்கள்:

1. நாய் பூனை நுழைந்து விடக்கூடும்.
2. மூன்று நான்கு பேராவது வருவார்கள்.
3. பொய் வாது சூது அறியாத மனிதர் அவர்.

இவ்வுதாரணங்களில் நாய் பூனை, மூன்று நான்கு, பொய் வாது சூது என்பன நாயையும் பூனையையுமோ மூன்றையும் நான்கையுமோ பொய்யையும் வாதையும் சூதையுமோ சேர்த்துக் குறிக்கவில்லை. முறையே, ஏதாவது மிருகம், சில, தீய பண்புகள் என்ற கருத்துக்களையே இவை குறிக்கின்றன. குறுந்தரிப்பின் பிரயோகம் இம் மரபுவழிச் சொல்லடுக்குகளின் கருத்தைச் சிதைத்து விடும்.

வாக்கியங்களில் அமையாத சொற்களதும் சொற்றொடர்களதும் பட்டியலில் உள்ள தனியம்சங்களை வேறுபடுத்திக் காட்டவுங் குறுந்தரிப்புப் பயன்படும். உதராணம்: நெய், உப்பு, புளி, சீனி, மிளகு, சீரகம்.

'சக' என்ற சொல்லுக்கு ஈடான ஆங்கிலச் சொல் மூலம் ஆங்கில வாக்கியங்களை இணைக்க முடியும். மரபுத் தமிழில் அவ்வசதியில்லை. ஆயினும் சமகாலத் தமிழுக்கு அத்தேவையில்லாது போய்விடாது. நெருக்கமான உறவுடைய ஒன்றுக்குமதிகமான வாக்கியங்களை அவ்வுறவை நேரடியாக அடையாளம் காட்டாது இணைக்கக் குறுந்தரிப்பைப் பாவிக்கலாம்.

ஆங்கிலத்தில் இரண்டுக்கு மேற்பட்ட வாக்கியங்களை இணைக்கும்போது 'சக' என்ற பொருளுடைய சொல்லினிடத்துக் குறுந்தரிப்புப் பயன்படுகிறது. அதேமுறையைத் தமிழிற் பிரயோகிப்பதற்கான சில உதாரணங்களைக் கீழே காணலாம்.

1. நான் வந்தேன், மரம் விழுந்தது.
2. இதைப் பார்த்து நான் சிரிப்பேன், நீ அழுவாய், அவர் ரசிப்பார்.
3. அவன் வந்தான், கண்டான், கொண்டான், சென்றான்.
4. போயின, போயின, பொழுதுகள் போயின.

மேற்கூறிய நான்கு உதாரணங்களிலும் இரண்டு அல்லது மேற்பட்ட வாக்கியங்கள் குறுந்தரிப்பால் இணைக்கப்பட்டுள்ளன. முதலாவதில் நான் வந்ததற்கும் மரம் விழுந்ததற்கும் ஒரு தொடர்பு கற்பிக்கப் படுகிறது. மற்றைய மூன்றிலும் பொதுவான அம்சங்களையுடைய மூன்று வாக்கியங்கள் இணைக்கப்பட்டுள்ளன. "இதைப் பார்த்து நான் சிரிப்பேன். இதைப் பார்த்து நீ அழுவாய். இதைப் பார்த்து அவர் ரசிப்பார்." என்று வரும் வசனங்கள் மூன்றையும் இரண்டாவது உதாரணம் ஒன்றுபடுத்துகிறது. மூன்றாம் உதாரணத்தில், அவன் என்ற பொது எழுவாயையுடைய நான்கு வாக்கியங்கள் இணைகின்றன. நான்காவதில், "பொழுதுகள் போயின." என்ற வாக்கியம் தன்னுடனே இருமுறை இணைக்கப்படுகிறது. இவ்வாறான உதாரணங்கட்கு வரையறையே இல்லை. எனினும் இவற்றிற் குறுந்தரிப்பு அவசியமா என்ற கேள்வி மரபுசார்ந்த பார்வையில் எழ இடமுண்டு.

மரபுக்கும் அப்பாற், குறுந்தரிப்பின் மூலம் தமிழின் சாத்தியப்பாடுகளை மிகவும் விஸ்தரிக்க முடியும். கீழ் வரும் எளிய உதாரணங்களைக் கவனியுங்கள்.

1. இந்தியப் படைகள் வந்தன, ஒட்டுண்ணிகளும்.
2. கோபத்துடன் தீ எழும், வெறுப்புடன், அச்சத்துடன்.
3. பாருங்கள், கேளுங்கள், இக் கொடுமையை இல்லாது ஒழியுங்கள்.

முதல் உதாரணத்தில் 'ஒட்டுண்ணிகளும்' என்ற சொல்லை அடுத்து 'வந்தன' என்ற வினைச்சொல் தவிர்க்கப்பட்டுள்ளது. அடுத்ததில் 'வெறுப்புடன் தீ எழும்', 'அச்சத்துடன் தீ எழும்' என்ற கூற்றுக்களிற் 'தீ எழும்' என்ற சொற்றொடர் தவிர்க்கப்பட்டுள்ளது. மூன்றாவதில் 'இக் கொடுமையை' என்ற சொற்றொடர் இரண்டு இடங்களிற் தவிர்க்கப்பட்டுக் கூட்டுவாக்கியத்தின் கடைசிப் பகுதியில் மட்டுமே பேணப்பட்டுள்ளது. இவ்வாறான வாக்கியங்களை நெடுந்தரிப்பின் உதவியுடனும் அமைக்கலாம். முழுத்தரிப்பின் பாவனைக்கும் இங்கு இடமுண்டு. இத்தகைய சொற்பிரயோகங்கள் பெருமளவும் ஆக்க இலக்கியங்களுக்கு உகந்தவை. கட்டுரைகளிலும் உரைகளிலுங்கூட இவை பயன்படக்கூடும். கவிதையில் மொழியின் சாத்தியப்பாடுகள் அதிகம் பரீட்சிக்கப்படக் கூடியவை. அவ்வகையிற், தரிப்புக்குறிகள்

ளின் பயன்பாடு, முக்கியமாகக் குறுந்தரிப்பின் பயன்பாடு, மேலும் விரிவுபட இடமுண்டு.

கவனத்துக்குரியது யாதெனில், முழுத்தரிப்போ பின்னர் விபரிக்கப் படவுள்ள நெடுந்தரிப்போ தராத ஒரு நெருக்கத்தைக் குறுந்தரிப்பு இவ் வாக்கியங்கட்குத் தருகிறது. இவ்வாறான வாக்கிய இணைப்பு வழமையான எழுத்து நடைக்கு அவசியமில்லையாயினும், ஆக்க இலக்கியத்தில் மிகவும் பயன்படக் கூடிய ஒன்று. இக் கருத்து தமிழ் மொழியிற் குறுந்தரிப்பின் புதிய சாத்தியப்பாடுகளில் ஒன்றாகவே முன்வைக்கப்படுகிறது என்பதையும் அரைத்தரிப்பின் பிரயோகம் இங்கு குழப்பத்திற்கு இடமளிக்கவில்லை என்பதையும் வலியுறுத்த வேண்டும்.

எவ்வாறாயினுங், குறுந்தரிப்பைக்கொண்டு வாக்கியங்களை இணைக் கும்போது குழப்பங்கள் ஏற்பட இடமுண்டு. நெடுந்தரிப்புக் கூடச் சில குழப்பங்களை தவிர்க்க உதவாது. வாக்கியங்களை ஐயத்துக் கிடமில்லாது தெளிவாக அமைப்பதற்குப் பிரதியீடாக தரிப் புக்குறிகளின் பாவனை அமையமுடியாது. பின்வரும் உதாரணங்களைக் கவனியுங்கள்.

1. மழையில் விளைந்தது, பனியில் நனைந்தது.
2. நாம் அழகாகப் பேசுவோம், பாடுவோம், ஆடுவோம்.
3. ஒருவரை ஒருவர் போற்றிப் பாடினர், தூற்றிப் பேசினர், மறந்து போயினர்.

முதலாவது உதாரணத்தில், ஏதோ ஒன்று மழையில் விளைந்து அது பனியிலும் நனைந்தது என்று சொல்ல முற்பட்டாலும், மழையில் விளைந்த பொருள் பனியில் நனைந்தது என்று கருதவும் இட முண்டு. குறுந்தரிப்பு இல்லாதவிடத்து, நிச்சயமாக இரண்டாவது கருத்தே செல்லுபடியாகும். மற்றப்படி, குறுந்தரிப்பு வாக்கியங்கள் இரண்டை இணைக்கிறது என்று அறியாத ஒருவர், அதை அவசிய மற்றதாகக் கருதி, மழையில் விளைந்த பொருள் பனியில் நனைந் ததென்று விளங்கிக்கொள்வது சாத்தியம். இவ்விடத்து அது என்ற சொல்லைக் கூட்டு வாக்கியத்தின் முதலில் வைக்கும்போது தெளி வீனம் இல்லாது போகிறது. அல்லாதவிடத்து நெடுந்தரிப்பைப் பயன்படுத்துவது உகந்த மாற்று வழியாகும்.

இரண்டாவது உதாரணத்தில், "நாம் அழகாகப் பேசுவோம், நாம் அழகாகப் பாடுவோம். நாம் அழகாக ஆடுவோம்." என்ற கருத் தும் "நாம் அழகாகப் பேசுவோம். நாம் பாடுவோம். நாம் ஆடு வோம்." என்பதும் ஒரே அளவு சாத்தியமானவையாயினும், முன் னையதே பெரும்பாலும் வாசிப்பவரின் மனதிற்குப் படக்கூடும். இவ்விடத்து நெடுந்தரிப்பு மூலமும் பிரச்சனை தீராது. 'நாம்' என்ற சொல்லைப் 'பாடுவோம்', 'ஆடுவோம்' என்ற சொற்கள் ஒவ் வொன்றின் முன்னாலும் இடுவதன் மூலம் இத்தெளிவீனத்தை இல் லாது செய்யலாம்.

மூன்றாவதில், 'ஒருவரையொருவர் மறந்து போயினர்' என்ற வித மாக ஒருவர் அக் கூட்டு வாக்கியத்தின் கடைசிப் பகுதியை விளங் கிக் கொள்ள இடமுண்டு. இதைத் தவிர்க்க வேண்டுமாயின் 'அனைத்தையும் மறந்து போயினர்.' என்றவிதமாக கூட்டு வாக்கி யத்தின் இறுதிப் பகுதியை மாற்றியமைக்க வேண்டும்.

எழுவாய் பயனிலைகளைத் தெளிவாக அடையாளம் காணக்கூடியவாறு உள்ள வாக்கியங்களைக் குறுந்தரிப்புக்களால் இணைக்கும்போது மேற்குறிப்பிட்ட விதமான பிரச்சனைகளுக்கு இடமிராது. தோன்றா எழுவாய் பயனிலைகள் காரணமாகவே தெளிவீனம் உருவாகிறது என்பதை இவ்விடத்துச் சுட்டிக் காட்டுவது பொருத்தமானது. பின் வரும் உதாரணங்கள் இதை விளக்கப் போதுமானவை.

1. அவர் அழகாகப் பாடுவார், அவர் ஆத்திரங்கொண்டு ஏசுவார்.
2. இங்கே விசையைத் தட்டினர், அங்கே குண்டு விழுந்தது.

இங்கே குறுந்தரிப்பு எவ்விதமான தெளிவீனத்திற்கும் இடமளிக்காமல் இரண்டு வாக்கியங்களை நெருக்கமாக இணைக்கிறது.

முகவரிகள், பதவிகள், தகுதிகள் போன்றவற்றைத் தெளிவாகக் குறிக்கவும் குறுந்தரிப்பு உதவும். உதாரணங்கள்: திரு.ஜோன் மேஜர், பிரித்தானிய முதலமைச்சர், 10, டவ்னிங் தெரு, லண்டன்; பேராசிரியர் க. கைலாசபதி, எம்.ஏ.(இலங்கை), பிஎச்.டி.(பேமிங்ஹம்). இலங்கை, பேமிங்ஹம் என்ற சொற்களின் முன்பின்னாகவுள்ள அடைப்புக் குறிகளைத் தவிர்த்துக் குறுந்தரிப்புக்களை இடலாம்.

ஒருவரது பேரின் பின்னால் வரும் தகுதிகள், பட்டங்கள், பதவிகள் ஆகியவற்றை உள்ளடக்கி வாக்கியங்களை அமைக்கும்போது சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. தமிழில் வரும் எட்டு வேற்றுமை உருபுக

ளில் எழுவாய்க்குரிய முதலாவது போக மற்றவை பிரச்சனைக்குரியன.

'ஜோன் மேஜர், பிரித்தானிய முதலமைச்சரின்....' அல்லது 'ஜோன் மேஜர், பிரித்தானிய முதலமைச்சருடைய....' என்றவாறு வாக்கியங்களை அமைக்க முடியாது.

"ஜோன் மேஜர், பிரித்தானிய முதலமைச்சர், உரையாற்றியபோது களைப்புற்றுக் காணப்பட்டார்." என்று வரும்போது இரண்டாவது அரைத்தரிப்பை நீக்கினால் ஜோன் மேஜரும் பிரித்தானிய முதலமைச்சரும் வேறு நபர்களோ என்றவிதமான பிரச்சனையும் எழலாம். எனவே, ஒருவரை அடையாளம் காட்டும் முறையில் வரும் வாக்கியத்திலோ மேற்கூறிய விதமான வாக்கியத்திலோ ஒருவரது பேரின் பின்னால் அவரது பதவியைக் குறிப்பிட முடியும். பேரின் பின்னால் வரும் பட்டங்களும் முற்குறிப்பிட்ட பிரச்சனைகளை எழுப்புவன.

தமிழில் இப்பிரச்சனைகள் இரண்டுவிதமாகக் கையாளப்படலாம். கீழ்வரும் உதாரணங்கள் இவற்றை விளக்குவன.

1. ஜோன் மேஜர், பிரித்தானிய முதலமைச்சர் இன்று நாடு திரும்பினார்.
2. பிரித்தானிய முதலமைச்சர் ஜோன் மேஜருக்கு நாட்டில் ஆதரவு குறைந்து வருகிறது.
3. கைலாசபதி, எம்.ஏ., பிஎச்.டி. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாற்றினார்.
4. கைலாசபதி, எம்.ஏ., பிஎச்.டி. அவர்களது இலக்கியப் பணி போற்றுதற்குரியது.

முதலாம், மூன்றாம் உதாரணங்களிற் பட்டங்களும், பதவியும் பேரின் பின் வைக்கப்படுவதிற் பிரச்சனையில்லை. இரண்டாவதிற் பதவி பேரிற்கு முன் வருவதாற் பிரச்சனை தீருகிறது. நான்காவதில் 'அவர்கள்' என்ற சொல் பிரச்சனையைத் தீர்க்க உதவுகிறது.

வரைவிலக்கணப்பாங்கிலான சொற்றொடர்களை வாக்கியத்தினின்று தனிமைப்படுத்துவதுங் குறுந்தரிப்பின் ஒரு முக்கியமான ப்யன்பாடு. கீழ்வரும் உதாரணங்கள் இதைத் தெளிவுபடுத்துவன.

1. பிரிட்டன், அதாவது ஐக்கிய ராச்சியம், இனியும் முடியரசராகத் தொடர வேண்டுமா?
2. முத்துசுவாமி தீட்சிதர், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர், சமஸ்கிருதத்திலேயே பாடல்களை எழுதினார்.
3. ஈருருளி, அல்லது சைக்கிள், இன்று கியூபாவின் பிரதான போக்குவரத்துச் சாதனமாக உள்ளது.

இவ்விடங்களிற் குறுந்தரிப்புகள் ஒருசோடி அடைப்புக்குறிகள் போற் செயற்படுகின்றன. குறுந்தரிப்புக்கட்கு இடையிலான விஷயங்களை அகற்றினாலும் வாக்கியம் சரியாகவே விளங்கிக் கொள்ளப்படும். குறுந்தரிப்புக்கள் உள்ளடக்கிய தகவல் ஒரு மேலதிகமான விளக்கமாகவே இங்கு அமைகிறது.

குறுந்தரிப்பில்லாமல் எழுதுவதற்கேற்ப இந்த வசனங்களைத் திருத்தியமைக்க முடியும். ஆயினுங் குறுந்தரிப்பு, வசனங்களின் நீளத்தைக் குறைக்க உதவுகிறது. மேற்குறிப்பிட்ட வகையிலான வாக்கிய அமைப்பு சில சிக்கல்களையும் புகுத்துகிறது. கீழ்வரும் உதாரணங்கள் இதை விளக்க உதவுவன.

1. ஈழம் அல்லது இலங்கையின் நெருக்கடி இவ்வாறு தொடங்கியது.
2. ஈழத்தின், அல்லது இலங்கையின், நெருக்கடி இவ்வாறு வளர்ந்தது.

முதலாவது வாக்கியத்திற் குறுந்தரிப்பு அவசியமில்லை என்பதோடு, அவ்வாக்கியம் தமிழ் இலக்கண விதிகளுக்குப் புறம்பான ஒரு சொற்றொடரமைப்பைப் புகுத்துகிறது என்பதும் முக்கியமானது. தமிழ் இலக்கண விதிகளைச் சார்ந்த முறையிற் பகுத்தாய்ந்தால், இவ்வாக்கியம் 'ஈழம்' என்ற சொல்லை 'இலங்கையின் நெருக்கடி' என்ற பதத்துடன் ஒப்பிடப்படும் ஓர் பேர்ச்சொல்லாகக் காட்டுகிறது. இரண்டாவது வாக்கியத்திற் குறுந்தரிப்புகள் இடப்படாவிடின், ஈழமும் இலங்கையும் வேறு பொருட்கள் என்று கருத நேரிடும். குறுந்தரிப்புக்கள், இரண்டும் ஒரு பொருளே என உணர்த்தினாலும், 'அல்லது' என்ற சொல்லைவிட 'அதாவது' என்ற சொல் கூட வசதியானது.

பயனிலை விசேடனங்களான சொற்றொடர்கள் வினைச் சொல்லையொட்டி வராதபோது குறுந்தரிப்பின் மூலம் அவற்றைத் தனிமைப்படுத்தல் வாக்கியத்தைத் தெளிவுபடுத்தும்.

1. வேறு தொழில் இல்லாத காரணத்தால், நான் இதைச் செய்கிறேன்.
2. சில நேரங்களிற், சில நிர்ப்பந்தங்களாற், தவறுகள் நேர்கின்றன.
3. நல்ல காரணத்திற்காகவே, வளர்ந்த மரத்தை அவன் தறிக்கிறான்.
4. கொட்டும் மழையிற், குளிர்மிகும் நாளில், வளர்ந்த வாழை விழுந்து கிடந்தது.

முதலிரண்டு உதாரணங்களிலும் குறுந்தரிப்பு அவசியமில்லை. ஆயினும் இத்தகைய சொற்றொடர்கள் நீளமாக இருப்பின், குறுந்தரிப்பு, வாசிப்பவருக்கு உதவியாக இருக்கும். மூன்றாவதில் 'நல்ல காரணத்திற்காகவே' என்ற சொற்றொடரைத் 'தறிக்கிறான்' என்ற சொல்லுக்கு முன்னால் வைத்தாற் குறுந்தரிப்பு அவசியமில்லை. அல்லாத பட்சத்திற், குறுந்தரிப்பை அகற்றினால் வாக்கியத்தின் பொருள் மாறுபடும். கடைசி வாக்கியத்தை எவ்வாறு மாற்றி எழுதினும், குறுந்தரிப்பின் உதவி அவசியம். ("வளர்ந்த வாழை குளிர்மிகும் நாளில் விழுந்து கிடந்தது கொட்டும் மழையில்" என்று எழுதினால் அரைத்தரிப்பு அவசியமில்லாமற் போகலாம். ஆயினும் இத்தகைய வாக்கியம் தமிழுக்கு வழமையானதுமில்லை, வாசிக்கத் தெளிவானதுமில்லை. மேலதிகமான பயனிலை விசேடனங்கள் வருமாயின் அரைத்தரிப்பை முற்றாகவே தவிர்க்க முடியாது போகும்).

எழுவாயைப் பயனிலையினின்று தனிக் குறுந்தரிப்பாற் பிரிப்பது ஆங்கில எழுத்து நடையில் விரும்பப்படுவதில்லை. தமிழிலோ, தெளிவுகருதி, எழுவாயைப் பயனிலையினின்று தனிமைப்படுத்தும் தேவை ஏற்படுகிறது. பின்வரும் வாக்கியங்களிற், குறுந்தரிப்பு, வாசிப்பவருடைய வசதி கருதிப் பாவிக்கப்படுகிறது.

1. நல்லதம்பி ஆசிரியர், தலையங்கத்தை நம்பி எதுவுஞ் செய்ய மாட்டார்.
2. நீ சொன்னாயென்று இவனும் எதையோ செய்ய, அவர்களும் ஓடினார்கள்.
3. விடுதலை விரும்பி சிதம்பரப்பிள்ளை, பிறந்த நாட்டிலேயே கப்பற் தொழில் நடத்த முற்பட்டார்.

முதலாவது வாக்கியத்திற் குறுந்தரிப்பு வரும் இடத்திற்கேற்பக் கருத்து மாறுபடும். குறுந்தரிப்பை நல்லதம்பிக்குப் பின் இட்டால் ஆசிரியரும் நல்லதம்பியும் வேறு நபர்களாகி விடுவார்கள். நம்பிக்கு முன் இட்டால் நம்பி என்ற சொல் ஒரு மனிதரைக் குறிப்பதாகிவிடும்; பின்னால் இட்டால், வாக்கியம், தோன்றா எழுவாய் காரணமாக, எவரையோ பற்றியதாகிவிடும். நல்லதம்பி அல்லது நல்லதம்பி ஆசிரியர் என்ற எழுவாய்களைப் பயனிலையினின்று பிரிக்காத பட்சத்தில் வாக்கியம் தெளிவில்லாது போகும்.



இரண்டாவது வாக்கியத்திற் குறுந்தரிப்பு இல்லாவிடின், "இவனும் அவர்களும் ஓடினார்கள்." என்றே கருதப்படும். அக் கருத்தை மேலுந் தெளிவாக்க "நீ சொன்னாயென்று இவனும், எதையோ செய்ய அவர்களும் ஓடினார்கள்." என எழுதலாம். ஆயினும் அது மிகவும் அவசியமில்லை.

மூன்றாவதில், முதலாவது வாக்கியத்திற் போன்று, குறுந்தரிப்பு வரும் இடம், எழுவாய் எதென்று தீர்மானிக்கும். அதைவிட 'விடுதலை விரும்பிக்கு'ப் பின்னாலும், 'சிதம்பரப்பிள்ளை'க்குப் பின்னாலும் குறுந்தரிப்புக்கள் இடப்படின், சிதம்பரப்பிள்ளை ஏன் கப்பற் தொழிலை நடத்த முற்பட்டார் என்பதை விளக்குவதே வாக்கியத்தின் நோக்கமாகிவிடும்.

'விடுதலை விரும்பி சிதம்பரப்பிள்ளை' என்ற சொற்றொடரை 'விடுதலை விரும்பிச் சிதம்பரப்பிள்ளை' என எழுதினால் 'விடுதலை விரும்பி' என்ற சொற்றொடர் சிதம்பரப்பிள்ளையின் நோக்கத்தைக் குறிப்பதாகிவிடும். மற்றப்படி அது அவரது பேரை விசேடிக்கும் ஒரு சொற்றொடராகிவிடும். இன்று சந்தி விதிகள் இறுக்கமாகப் பேணப்படாமையால், 'விடுதலை விரும்பிச்' என்று எழுதாதவிடத்துக் குறுந்தரிப்பையாவது வைத்திருப்பது அவசியமாகும்.

குறுந்தரிப்பு முற்றாகவே அவசியமற்ற சில சூழ்நிலைகளும் உள் என. தமிழிற் ஒத்த தன்மையுடைய சில சொற்களையும் சொற்றொடர்களையும் இணைக்க, 'உம்' என்ற விகுதி பயன்படும்போது குறுந்தரிப்பு அவசியமில்லை: சில சமயங்களிற் குறுந்தரிப்பை இடுதல் குழப்பத்திற்கு வழி கோலக்கூடும். கீழ்வரும் உதாரணங்களைக் கவனியுங்கள்.

1. அவர்களும், அவனும், அவளும் இங்கு வருவதையே விரும்பினார்கள்.
2. இது சரியென்பதாலும், இதன் மூலம் தீர்வு கிடைக்குமென்பதாலும், இதைவிட வேறு வழி இல்லையென்பதாலும் நாம்

இந்த முயற்சியில் இறங்கினோம்.

முதலாவது வாக்கியத்தில் அவர்கள் விரும்பினார்களா அல்லது அனைவருமே விரும்பினார்களா அல்லது அவர்களும் அவனும் விரும்பினார்களா என்று தெளிவில்லாதுள்ளது. எல்லாருமே இங்கு வர விரும்பினார்கள் என்று கூறுவதாயின் குறுந்தரிப்பு இடப்படக் கூடாது; அல்லது அவளும் என்ற சொல்லுக்குப் பின்னர் அது வர வேண்டும்.

இரண்டாவதிற் குறுந்தரிப்பு எதுவிதமான பயனுமற்றது.

**5. நெடுந் தரிப்பு (;)**

குறுந்தரிப்பைப் போலவே, ஒத்த தன்மையுடைய வாக்கியங்களையோ வாக்கியங்களின் கூறுகளையோ இணைப்பது நெடுந்தரிப்பு. சேர்த்துக் காட்டப்படும் விஷயங்களின் வேறுபட்ட தன்மையை வலியுறுத்தவும் குறுந்தரிப்பை மட்டுமே பிரயோகித்தல் போதாவிடத்தும் நெடுந்தரிப்புப் பயன்படும். கீழ்வரும் உதாரணங்களைக் கவனிக்கவும்.

1. முதலாவது யூ.என்.பி. ஆட்சிக் காலம்; சுதந்திரக் கட்சியின் வளர்ச்சியும் இடதுசாரிக் கட்சிகளின் சீரழிவும்; யூ.என்.பி.யின் மீளல்; ஐக்கிய முன்னணியும் அதன் குலைவும்; யூ.என்.பி. சர்வாதிகாரத்தின் எழுச்சி.

2. ஆடல், பாடல், நாடகம்; சிற்றுரை, விவரணம்; கலந்துரையாடல்; ஊர்வலம், பரிசளிப்பு, விருந்துபசாரம்.

3. நிலவு மெல்ல நடந்து வந்தது; நிழல்கள் என்னைத் தொடர்ந்து வந்தன.

முதலாவது உதாரணம் சில தலைப்புக்களைப் பட்டியலிடுகிறது. இத் தலைப்புக்கள் எவ்வகையிலும் ஒன்றோடொன்று சேர்த்துக் கருதப்படக் கூடாதென்பதாற் குறுந்தரிப்புக்குப் பதிலாக நெடுந்தரிப்பு இடப்பட்டுள்ளது.

இரண்டாவது உதாரணத்திற் குறுந்தரிப்புக்கள் ஏற்கனவே ஒவ்வொரு அம்சத்திலும் உள்ள கூறுகளை அடையாளம் காட்டுகின்றன. பிரதான அம்சங்களை வேறுபடுத்த நெடுந்தரிப்பு அவசியமாகிறது.



மூன்றாவது உதாரணத்தில் இரண்டு வாக்கியங்களிடையிலும் ஒரு தொடர்பை உணர்த்த நெடுந்தரிப்புப் பயன்படுகிறது.

**6. விளக்கக் குறி (:)**

நாடகச் சுவடிகளில் ஒவ்வொரு பாத்திரமும் பேசியதைக் குறிக்கப், பாத்திரப் பேருக்குப் பின் இக் குறி இடப்படும். சிலசமயம் மேலதிகமாக(:- என்றவாறு) ஒரு கோடும் பயன்படுமாயினும், அது எப்போதுமே அவசியமில்லை.

ஒரு பட்டியலை அறிமுகப்படுத்தும் பாங்கிலும் உதாரணங்களையும் மேற்கோள்களையும் வழங்கும் வகையிலும் இக் குறியைப் பயன்படுத்துவது வழமை. கீழ்வரும் உதாரணங்கள் இதனைத் தெளிவுபடுத்துவன:

1. வளிமண்டலத்தின் முக்கிய வாயுக்கள்: ஓட்சிசன், காபனீரொட்சைட்டு, நைதரசன், நீராவி.

2. மாக்ஸ் பின்வருமாறு சொன்னார்: "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்".

இரண்டு வாக்கியங்களிடையே காரணகாரிய வகையிலான உறவு இருப்பின், விளக்கக்குறி அவ் வாக்கியங்கள் கூறும் கருத்துக்களிடையிலான இந்த உறவை வலியுறுத்த உதவும். கீழ்வரும் உதாரணங்களைக் கவனிக்கவும்.

1. இன ஒடுக்கலுக்கெதிராகப் போராடப் புறப்பட்டோம்: ஏன் போராடுகிறோம் என்று இப்போது மறந்து விட்டோம்.

2. இன்று நீவிர் மோனித்திருப்பீர்: நாளை உமக்காய்ப் பேசுவோர் இரார்.

**7. மேற்கோட் குறிகள் (' '; " ")**

ஒற்றை மேற்கோட்குறிகளும் இரட்டை மேற்கோட்குறிகளும் இன்னொருவரது கூற்றை எடுத்துரைக்கப் பயன்படுவன. இன்று, இரட்டை மேற்கோட்குறியே இதற்கு அதிகம் பயன்படுகிறது. எனினும் ஒரு மேற்கோளுக்குள் இன்னொன்று வருமாயின் பிரதான

மேற்கோளுக்கு இரட்டை மேற்கோள் அடையாளமும் அதனுள் வரும் மேற்கோளுக்கு ஒற்றை மேற்கோளும் பயன்படலாம். பின் வரும் உதாரணங்களைக் கவனியுங்கள்:

1. "மழையில் நனைந்தவாறு நடந்து வந்தவரிடங் குடையைக் கொடுத்தேன். அவர் 'அறநனைந்தவனுக்கு குளிரென்ன கூதலென்ன' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்." என்று கந்தசுவாமி விளங்கப்படுத்தினார்.

2. "'மெல்லத் தமிழினிச் சாகும்-அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்'
என்றந்தப் பேதை உரைத்தான்."

என்றுதான் பாரதி எழுதினாரேயொழிய, மெல்லத் தமிழினிச் சாகும் என்று தான் கருதுவதாக எங்குமே அவர் எழுதவில்லை.

ஒரு மேற்கோளுக்குள் வரும் தரிப்புக்குறிகள் உள்ளவாறே பேணப் படுவன. மேற்கோளின் முடிவில் முழுத்தரிப்பு வருமாயின், மேற் கோள் வாக்கிய முடிவில் வரும்போது, முழுத்தரிப்பை மேற்கோட் குறிக்கு வெளியே இடுவது பரவலான நடைமுறை. இது தர்க்கரீதி யாகச் சரியானதோ என்பது விவாதத்திற்குரியதாயினும், நடைமுறை இங்கு வேறு காரணங்களையும் கவனத்திற் கொள்கிறது என்று குறிப்பிடல் தகும். கீழ்வரும் உதாரணங்கள் இதனை விளக்குவன.

1. அவர், "நில்லாதே, போ. நீ என் முகத்தில் விழியாதே." என்று ஏசினார்.
2. காந்தி சிரித்துக்கொண்டே சொன்னார்: "உமது கடிதத்திற் பய னுள்ள பொருள் இந்தக் குண்டூசி மட்டுமே. அதை நான் எடுத்துக் கொண்டேன்".

மேற்கோளாகக் கூறப்படும் விஷயம் ஒரு பந்திக்கும் அதிகமாயின் ஒவ்வொரு பந்தியின் தொடக்கத்திலும் மேற் கோட்குறியின் முற்ப குதி வரும். ஆயினும் கடைசிப் பந்தியின் முடிவில் மட்டுமே மேற் கோட்குறியின் பிற்பகுதி அமையும். கீழ்வரும் உதாரணத்தைக் கவ னியுங்கள்:

இனி, க.நா.சு.வை நோக்குவோம்.

"எல்லா மொழிகளிலும் கவிதையென்று ஒன்று ஆரம்பகாலமுதல் உண்டுதான்; ஆனால் நல்ல கவிதையென்பது மிகவும் அபூர்வமான சரக்கு. இந்த அபூர்வமான சரக்கு தமிழ் மொழியில் சற்று மலிந்தே யிருக்கிறது என்று சொல்ல வேண்டும். இது இன்று நேற்று ஏற்பட்ட காரியமல்ல. ஓரளவிற்கு ஆரம்பமுதலே நல்ல கவிதையென்றால் என்ன என்று தெரிந்து செய்த கவிகள் தமிழில் இருந்து வந்திருக்கி றார்கள் என்றுதான் தோன்றுகிறது.

"சமுதாய ரீதியான அளவில் இதற்குப் பல காரணங்கள் சொல்ல லாம். கண்டு சொல்ல ஒருவரும் முன்வந்ததில்லை என்பதாற் கார ணங்கள் இல்லாது போய்விடாது அல்லவா?"

(நன்றி: திறனாய்வுப் பிரச்சனைகள், கைலாசபதி 1980)

மேற்கோட்குறிகட்கு வேறு பயன்களும் உள்ளன. ஒரு சொல்லோ சொற்றொடரோ வழமையில் இல்லாதவாறு பொருள் கொள்ளப்பட வேண்டுமென்றோ அதன் பிரயோகம் ஐயத்திற்குரியது என்றோ சுட்டிக்காட்டவும் ஒரு சொல் அல்லது சொற்றொடர் பற்றிய விசே ஷமான கவனத்தை ஈர்க்கவும் மேற்கோட் குறிகள் பயன்படலாம். கட்டுரைத் தலைப்புக்கள், நூற்பெயர்கள் போன்றவையும் மேற்கோட் குறிகளுட் தரப்படலாம். பொதுவாக, ஒருவர், வழமைக்கு மாறு பட்ட கருத்திற், தன் சொற்பிரயோகங்களை அடையாளங் காட்ட ஒற்றை மேற்கோட்குறிகளையும் பிறரது பிரயோகங்களைக் குறிக்க இரட்டை மேற்கோட்குறிகளையும் பயன்படுத்துவது வழமை என லாம். கீழ்வரும் உதாரணங்களைக் கவனிக்கவும்.

1. "ஸ்ரீ" அடையாளமிட்ட இலக்கத் தகடுகள் இனி இல்லை.
2. "முறிந்த பனை" இன்னும் தமிழில் வெளிவரவில்லை.
3. அவர்கள் "இனத்துரோகிகள்" வாழத் தகுதியற்றோர் என்று சொன்னார்கள்.
4. 'எதிரி' யாரென்று தெரியாமலா இது நடந்தது?
5. இவரை 'விசேஷமாகக்' கவனித்துக் கொண்டார்கள்.

மேற்கோட்குறிகளுள் அடையாளங் காட்டப்படும் பேர்ச்சொற்கள் தொடர்பான சில பிரச்சனைகளைத் தவிர்ப்பதாயின் வாக்கியம் மாற்றி எழுதப்பட வேண்டியும் நேரலாம். கீழ்வரும் உதாரணங்களைக் கவனிக்கவும்.

1. "புதுமைப்பித்தனை" இவர்கள் அறியமாட்டார்கள்.
2. "புதுமைப்பித்த"னை இவர்கள் அறியமாட்டார்கள்.

3. "புதுமைப்பித்தன்" அவர்களை, இவர்கள் அறியமாட்டார்கள்.

இது தமிழின் ஒட்டியிணையுஞ் சொல்லமைப்பின் பிரச்சனை. விசேஷ கவனத்துக்குரிய பேரை முதல் உதாரணத்தில் உள்ளவாறோ மூன்றாவதில் உள்ளவாறோ எழுதுவது பொதுவாகத் திருப்திகரமானது.

இவ்விடத்து, இன்னுமொரு சாத்தியப்பாட்டையும் நாம் கருத லாம். இது தமிழின் ஒட்டியிணையும் தன்மையை மறுத்து வேற் றுமை உருபுகளைத் தனித்து எழுதும் முறையாகும். ஏற்கனவே, சொற்களின் ஒட்டியிணையும் பண்பு, தேவைக்கேற்பத் தமிழில் விலக்கப்பட்டு வருகிறது என்பதால் இது எதிர்காலத்தில் ஏற்புடைய ஒன்றாக அமைய இடமுண்டு. உதாரணமாக,

1. "புதுமைப்பித்தன்"ஐ, "புதுமைப்பித்தன்"உம், "புதுமைப் பித்தன்"அது;
2. 'கொங்கிறீற்'ஐ, 'கொங்கிறீற்'உம், 'கொங்கிறீற்'இனது;
3. 'கொங்கிறீற்று'ஐ, 'கொங்கிறீற்று'உம், 'கொங்கிறீற்று'இனது;
4. 'பாட்டு'ஐ, 'பாட்டு'உம், 'பாட்டு'இனது.

மூன்றாம், நான்காம் உதாரணங்கள் சில பிரச்சனைகளை எழுப்பு கின்றன. தமிழிற் 'கொங்கிறீற்றுவை', 'கொங்கிறீற்றுவும்', 'கொங் கிறீற்றுவினது' என்றவிதமாக நாம் எழுதுவதில்லை. இவ்வாறே 'பாட்டுவை', 'பாட்டுவும்', 'பாட்டுவினது' என்பனவும் தமிழிற்கு உடன்படாதன. 'பாட்டும்', 'பாட்டும்', 'பாட்டினது' என்பனவே தமிழிற் செல்லுபடியாவன. ஆயினும் பாட் என்றெவரேனும் ஒரு வர் இருப்பின், 'பாட்டைக் கேட்டுவிட்டுச் சொல்கிறேன்' என்ற வாக்கியத்தை நாம் விளங்கிக் கொள்வது எவ்வாறு? பாட்டு என் பதையொத்த பொதுப்பேர்களை மேற்கோட் குறிகட்குட் தரும்தேவை குறைவு. ஒருவர் பாடியது பாட்டுத்தானா என்று நிச்சயமில்லாத போது, "அவரது 'பாட்டு'"என்ற விதமாகச் சிலவேளை குறிப்பிட நேரலாம். 'பாட்' என்பது குறிப்பிட்ட ஒரு நபரினதோ பொருளி னதோ இடத்தினதோ பேராயின், அதை அவ்வாறு அடையாளம் காட்ட நாம் மேற்கோட்குறிகளைப் பயன்படுத்தலாம். பொதுப்பேர்கள் தொடர்பாக இப்பிரச்சனை எழுவது மிக அபூர்வம். எனினும் இது சமகாலத் தமிழ் இலக்கணத்திற் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று.

எவ்வாறாயினும், மேற்கோட்குறிக்கும் சொல்லின் பின் இணைப்புக் குமிடையே இடைவெளியைத் தவிர்த்தாற் சில தெளிவீனங்கட்கு இடமேற்படாது. உதாரணமாக,

1. 'கொங்கிறீற்' ஓடு தருவார்கள்.
   'கொங்கிறீற்'ஓடு தருவார்கள்.
2. 'றொக்கற்' உடைய நிழல் விழுந்தது.
   'றொக்கற்'உடைய நிழல் விழுந்தது.

ஓடு, உடைய என்ற பின்னிணைப்புகளை விலக்கி எழுதுவதன் விளைவுகளை இங்கு மேலும் விவரிக்க அவசியமில்லை.

சொற்களுக்கு விஷேச அழுத்தங் கொடுக்க, மேற்கோட் குறிகட்குப் பதிலாகத் தடித்த எழுத்தோ சாய்ந்த எழுத்தோ அச்சிற் பயன்படும்; தட்டெழுத்திலும் கையெழுத்திலும் கீழ்க்கோடிடப்படும்.

**8. இணைத்தற்கோடு (-)**

ஆங்கிலத்திலே இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொல் லொன்றை அமைக்கவோ அல்லது அச்சொற்களை உறவுபடுத்தவோ இணைத்தற் கோடு பயன்படும். (உதாரணங்கள்: பண்டா-செல்வா உடன்படிக்கை; நடைபாதையின் 'நில்-நட' சைகை விளக்குகள்; மாக்ஸிசம்-லெனினிசம்-மாஓ சேதுங் சிந்தனை).

இக் கோடுகள் அரைத்தரிப்புக்கள் போன்று விளக்கப் பாங்கான சொற்றொடர்களைத் தனிமைப்படுத்தவும் பயன்படுகின்றன. ஆயினும், இவ்வாறான பிரயோகம் பெரும்பாலும் அவசியமற்றது. (உதாரணம்: மியான்மார் - பர்மா - இன்னமும் ராணுவ சர்வாதிகாரிகளின் கீழேயே உள்ளது). இத்தகைய பிரயோகத்தில் இணைத்தற் கோட் டுக்கும் சொற்களுக்கும் இடையே ஒரு எழுத்து அகல இடைவெளி இருக்க வேண்டும். குறுந்தரிப்புப் போன்று இணைத்தற் கோடும் வாக்கிய இறுதியில் வராது. (உதாரணம்: மதத்தின் பேரால் மக்களின் உரிமைகளை மறுப்போரிடம் சிக்கித் தவிக்கிறது இந்த நாடு - எங்கள் புனித புண்ணியபூமி).

இணைத்தற் கோட்டின் இன்னொரு பயன்பாடு ஒரு மேற்கோளின் மூலத்தை அடையாளங்காட்டுவதாகும். பின்வரும் உதாரணம் போதுமானது என நம்புகிறேன்.

ஓட்டப்பராயிருக்கும் ஏழையப்பர்
உடையப்பராய் விட்டால் ஓர் நொடிக்குள்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

ஒட்டப்பர் உடையப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பராய் விடுவார் உணரப்பா நீ
– பாரதிதாசன்

தட்டெழுத்திலும் சிலசமயம் அச்சிலும் ஒரு வரியின் முடிவில் வரும் சொல்லின் நீளங் காரணமாக அதை முறித்தெழுதும்போது இணைத்தற் கோடு பயன்படும். இணைத்தற் கோட்டைச் சொல்லின் முற்பகுதியுடன் இணைப்பது ஆங்கில மரபு. தமிழுக்கு இது அவசியமில்லையாயினும் வசதியானது. ஆங்கில நடைமுறையை யொட்டிய ஒரு உதாரணம்:

நாங்கள் எல்லாவற்றையுஞ் சட்டமியற்றிக் கட்டுப்படுத்த-
முடியுமென்று நம்புவதுபோல முடத்தனம் ஏதுமுண்டா?

தமிழிலிலும் இது பலரால் அப்படியே பின்பற்றப்படுகிறது. விலக்காகச் சிலர் இணைத்தற் கோட்டைச் சொல்லின் பிற்பகுதியிற் பொருத்துவர்:

நாங்கள் எல்லாவற்றையுஞ் சட்டமியற்றிக் கட்டுப்படுத்த
-முடியுமென்று நம்புவதுபோல முடத்தனம் ஏதுமுண்டோ?

இதன் ஒரு நல்ல அம்சம் எதெனின் இது முறிக்கப்பட்ட சொல்லையும் இரண்டு சொற்களின் இணைப்பையும் தெளிவாக வேறுபடுத்த உதவும். இரண்டு சொற்களின் இணைப்பிற், கோடு முதலாவது சொல்லை எப்போதுமே ஒட்டி நிற்கும்.

திகதிகளை எழுதும் போது, நாள், மாதம், வருடத்தை விலக்கிக் காட்டவும் இக் கோடு பயன்படும்.

**9. சாய் கோடு (/)**

அல்லது என்பதைக் குறிக்கவே இது பெரிதும் பயன்படுகிறது. ஆங்கிலத்தில் இது சிலசமயம் வேறு விதமாகவும் பயன்படுவதுண்டு. படிவங்களிலும் ஆவணங்களிலும் பயன்படுமளவுக்கு வேறு இடங்களில் இது பயன்படுவதில்லை. (உதாரணம்: பலகை/பிளாஸ்ற்றிக் கைபிடி வைத்த கலங்கள் வேண்டாம்). சாய் கோட்டுக்கும் சொல்லுக்குமிடையே இடைவெளி அவசியமில்லை.



**10. அடைப்புக் குறிகள் ( ) [ ]**

குறுந்தரிப்பிலும் அதிகம் பிரச்சனைக்குரிய அடையாளம் அடைப்புக்குறி எனலாம். ஏனெனில், ஆங்கிலத்திற் பயன்படும் முறையிலேயே அது தமிழிற் பயன்படுகின்றதாயினும் ஆங்கிலத்திற் கடைப்பிடிக்கப்படும் ஒரு நல்ல விதியைக் கடைப்பிடிக்க இயலாத விதமாகவே அடைப்புக்குறி தமிழிற் பயன்படுகின்றது.

ஆங்கிலத்தில், விளக்கப் பாங்கான அல்லது வரைவிலக்கணப் பாங்கான சொற்களையும் சொற்றொடர்களையுந் தனிமைப்படுத்த அரைத்தரிப்புக்கள் பயன்படுகின்ற முறையிலேயே அடைப்புக்குறிகள் பயன்படுகின்றன. அடைப்புக்குறிக்குட்பட்ட சொற்களைச் சேர்த்தோ விடுத்தோ வாசிக்கும் போது வாக்கியம் இலக்கணப் பிழையின்றி அமையவேண்டும் என்பது ஒரு பொதுவான பிரயோக விதி.

ஆங்கிலத்திற் போன்று தமிழிலும் ஒரு சொல்லின் விளக்கம் அதன் பின்னால் அடைப்புக்குறிகளின் நடுவே வைக்கப்படின், பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. சில வேளைகளில் மட்டுமே இவ்வாறான பிரச்சனைகள் ஏற்படமாட்டா. கீழ்வரும் அமைப்புக்களைக் கவனியுங்கள்.

பிரேமதாச (இலங்கையின் சனாதிபதி)யைக் கொன்றது யார்?
பிரேமதாசவை (இலங்கையின் சனாதிபதி) கொன்றது யார்?
பிரேமதாசவை (இலங்கையின் சனாதிபதியை)க் கொன்றது யார்?
(இலங்கையின் சனாதிபதி) பிரேமதாசவைக் கொன்றது யார்?

இவற்றுள் எது தமிழுக்கு இசைவானதென்று நான் விளக்க அவசியமில்லை. இவ்வாறே பின்வரும் வாக்கியங்களையும் ஒப்பிடலாம்.

இக் கொலை (எவராற் செய்யப்பட்டதெனத் தெரியாது) வரவேற்கத்தக்கதா?
(எவராற் செய்யப்பட்டதெனத் தெரியாத) இக் கொலை வரவேற்கத்தக்கதா?

"ஸ்ரீவள்ளி" (மகாலிங்கம் நடித்தது) பாடல்கள் இனிமையானவை.
(மகாலிங்கம் நடித்த) "ஸ்ரீவள்ளி" பாடலகள் இனிமையானவை.

தமிழில் அடைப்புக்குறிகள் ஏற்படுத்தும் பிரச்சனை, அவற்றை

படிப்பகம்

வாக்கியத்திற் சரியான இடத்தில் வைப்பதின் மூலம் தீர்ககப்படக் கூடியதேயெனிலும், ஆங்கிலத்திற் கையாளப்படும் வசதியுடன் தமிழிலும் அடைப்புக் குறிகளைக் கையாள முடியாது. வாக்கியத்துடன் சேர்த்து வாசிக்க வசதியான முறையில் வரும் விளக்கப்பாங்கான கூறுகள் அவற்றிற்குரிய சொல்லுக்கோ சொற்றொடருக்கோ முன்னர் வரலாம். அவ்வாறில்லாதவை சொற்றொடரை உடனடியாக அடுத்து வரவேண்டிய தேவையில்லை. பொதுவாக, வசனத்துடன் சேர்த்துக் கருதக்கூடிய, விளக்கப்பாங்கான சொற்றொடர்களையோ சொற்களையோ அடைப்புக்குறிகளாற் தனிமைப்படுத்துவதைக் கூடுமானவரை தவிர்ப்பது நல்லது. எனவே, முற்கூறிய வகையான வாக்கியங்களைக் கையாள அடைப்புக்குறிகளைத் தவிர்ப்பதோ, அல்லாத பட்சத்தில், ஒரு சொல்லையோ சொற்றொடரையோ அடையாளங் காட்டும் முறையில் அச்சொல்லினதோ சொற்றொடரினதோ முடிவில் விளக்கத்தை அடைப்புக்குறிக்குள் வைப்பதோ தகும். உதாரணமாக,

1. பிரேமதாசாவை (இலங்கையின் ஜனாதிபதி) கொன்றது யார்?
   இலங்கையின் ஜனாதிபதி பிரேமதாசாவைக் கொன்றது யார்?

2. "ஸ்ரீ வள்ளி" (மகாலிங்கம் நடித்த படம்) பாடல்கள் இனிமையானவை.
   மகாலிங்கம் நடித்த "ஸ்ரீ வள்ளி" பாடல்கள் இனிமையானவை.

3. செய்மதிகளாற் (Satellites) பயன் மிகவுண்டு.
   Satellites எனப்படுஞ் செய்மதிகளாற் பயன் மிகவுண்டு.

4. டாவினின் பரிணாமக் கொள்கையுடன் (theory of evolution) திருச்சபையினர் அதிருப்தி கொண்டனர்.
   டாவினின் theory of evolution எனப்படும் பரிணாமக் கொள்கையுடன் திருச்சபையினர் அதிருப்தி கொண்டனர்.

ஒரு சோடி அடைப்புக் குறிகட்கிடையே ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முழு வசனங்கள் இருப்பின் இறுதியாக வரும் முழுத்தரிப்பை அந்தக் குறிகட்கு வெளியே இடுவது வழமை. (வினாக் குறியும் வியப்புக்குறியும் அடைப்புக்கு உள்ளே அமையும்).

சதுர அடைப்புக்குறிகள், அடையாளங்காட்டும் பாங்கில், உசாத்துணை நூல்களின் இலக்கம் போன்றவற்றைக் குறிக்கப் பயன்படுவதுண்டு.



உதாரணமாக,

1. தமிழகத்திற் சமுதாய உணர்வுள்ள இலக்கியப் பார்வையை மறுப்போருக்கு முன்னோடியாக க.நா.சு. விளங்கினார் என்று கூறலாம் [கைலாசபதி 1980].

2. தமிழகத்தின் மார்க்சியவிரோத இலக்கியவாதிகளது ஆசானாகக் க.நா.சு. இருந்தாரென்று கைலாசபதி [12] கருதினார்.

இரண்டு உதாரணங்களிலும் உசாத்துணை ஆக்கங்களின் பட்டியலில் அடைப்புக்குறிக்குள்ளே அடையாளங்காட்டப்பட்ட நூலின் விபரங்கள் தரப்பட்டிருக்கும். முதல் உதாரணத்திற்கு உரிய பட்டியல், ஆசிரியர் பேரின் அகரவரிசைப்படி ஆக்கங்களைக் காட்டும். இரண்டாவதற்குரியது, கட்டுரையிலோ அத்தியாயத்திலோ நூலிலோ அந்த ஆக்கம் வரும் கிரமத்திற்கமைய இலக்கமிடப்பட்டு அமைக்கப்பட்டிருக்கும்.

மேற்கோள்களிற் சதுர அடைப்புக்கட்கு ஒரு விசேட பயனுண்டு. ஒரு குறிப்பிட்ட மேற்கோளிற் தோன்றாது நிற்கும் ஒரு சொல்லையோ சொற்றொடரையோ புகுத்தி மேற்கோளாகத் தரப்பட்ட வாக்கியத்தைத் தெளிவுபடுத்த இவை பயன்படலாம். கீழ் வரும் உதாரணங்களைக் கவனிக்கவும்.

1. நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்த தலைவர் பேசுகையில், "இன்றைய நெருக்கடியில் நாம் [அரசின் படைகளை] எதிர்த்து நிற்பது மிக அவசியம்." என்று குறிப்பிட்டார்.

2. "எவனாவது மானமுள்ள தமிழன் இருந்தால் என்னுடன் வெளியே வரலாம் [அப்படி எவரும் இல்லையென்பது அவரது திடமான நம்பிக்கை]. தேவையாயின் நான் தனியே போய்ப் பேராடித் தமிழ் மண்ணை மீட்டுத் தருவேன். அதற்குப் பிறகாவது என்னை நம்புவீர்கள்." என்று சூளுரைத்து வெளியேறினார்.

முதலாவது உதாரணத்தில், "அரசின் படைகளை" என்ற சொற்றொடர் மேற்கோளாகத் தரப்பட்ட வாக்கியத்தில் இருக்காத போதும், தலைவர், அவர்களைக் கருதிக்கொண்டே பேசியதாலும் அதை உள்ளடக்காவிடின் வாக்கியம் தெளிவில்லாது போகும்

என்பதாலும் அச் சொற்றொடரை உள்ளடக்குவது அவசியமாகிறது.

இரண்டாவது உதாரணத்தில் மேற்கோளைத் தந்தவர் தனது கருத்தையோ விளக்கத்தையோ மேற்கோளுக்குள் வைத்திருப்பதை அடையாளங்காட்டச் சதுர அடைப்புக்குறி பயன்படுகிறது.

**10. தனிமேற்கோட்குறி (')**

ஒற்றை மேற்கோட்குறி இணையின் பிற்கூறு தனியே ஆங்கிலத்தில் மூன்று வகைகளிற் பயன்படுகிறது. ஒருவருடைய என்பதை அடையாளங்காட்டும்போது அவரது பேரின்பின் இக்குறியும் s என்ற எழுத்தும் வரும். (உதாரணமாக, Darwin's). ஒரு சில சொற் கூட்டுக்களின் சுருக்கப்பட்ட வடிவங்களில் எழுத்துக்கள் தவறவிடப்பட்டுள்ளதைக் காட்டவும் இக்குறி பயன்படும். (உதாரணமாக, can't = can not, it's = it is)

இவற்றைவிட முக்கியமாக வருடங்களைக் குறிக்கும்போது முதலிரண்டு இலக்கங்களும் தவிர்க்கப்பட்டுள்ளன என்று காட்ட இக்குறி பயன்படும். (உதாரணமாக, '92 = 1992). இப்பயன்பாடு தமிழுக்கும் பொருந்தும்.

**11. அழுத்தம்**

ஒரு வாக்கியத்தினதோ பந்தியினதோ ஒரு பகுதியைப்பற்றிய விசேஷ கவனத்தை ஈர்க்க அதை அச்சிற் தடித்த எழுத்திலோ சாய்ந்த எழுத்திலோ தருவது வழக்கம். தட்டெழுத்திலும் கையெழுத்திலும் அவசியமான பகுதியின் கீழ்க் கோடிடுவது வழமை. கீழ்க் கோடிடுவது அச்சிலும் சாத்தியமானதே. ஆயினுஞ் சாய்ந்த எழுத்தும் தடித்த எழுத்தும் பார்வைக்கு அழகாக இருப்பன. கீழ்வரும் உதாரணத்தைக் கவனியுங்கள்.

> படிப்பவர் தெளிவாக வாசிக்க உதவும் நோக்கிலேயே இவ்வாலோசனைகள் கூறப்பட்டன. இவற்றை விறைப்பான முறையில் எவரும் பயன்படுத்தல் நல்லதல்ல. எவரது எழுத்து நடையையும் மந்தப் படுத்தும் முறையில் இவை கையாளப்படக்கூடாது.

மிகையான அளவில் அழுத்தம் பயன்படுமாயின் அது அழுத்தங் கொடுப்பதன் நோக்கத்தையே முறியடிப்பதாகும்.



**12. இடைவெளிகள்**

சொற்களிடையே ஒரு எழுத்தகல இடைவெளி இடப்படும். ஒரு சொல்லை அடுத்து வரும் தரிப்புக்குறி, குறுந்தரிப்பாகவோ நெடுந் தரிப்பாகவோ முழுத்தரிப்பாகவோ வினாக்குறியாகவோ வியப்புக் குறியாகவோ விளக்கக்குறியாகவோ இருப்பின் இடைவெளி விடப் படுவதில்லை. இவ்வாறு இடைவெளி விடப்படுவதன் விபரீதமான விளைவுகளை கணனி அச்சிற் காணலாம். வரியின் முடிவில் வாக்கியத்தின் ஒரு சொல்லும் அடுத்த வரியில் குறுந்தரிப்பும் வருவது இவ்வாறு அவசியமற்ற இடைவெளி விடுவதாலேயே நிகழ்கிறது.

வாக்கிய இறுதியில் வரும் முழுத்தரிப்பையும் வினாக்குறியையும் வியப்புக்குறியையும் அடுத்து இரண்டு எழுத்தகல இடைவெளி விடப்படலாம். இது வாக்கியங்களைத் தனித்தனியே அடையாளங்காண உதவும். இவ்விதி எப்போதுமே கடைப்பிடிக்கப்படுவதில்லை. எவ்வாறாயினுங், தெளிவான தட்டெழுத்துச் சுவடிகளை அமைக்க இது மிகவும் உதவும்.

குறுந்தரிப்பையும் நெடுந்தரிப்பையும் விளக்கக்குறியையும் அடுத்து ஒரு எழுத்தகல இடைவெளி விடப்படும். மேற்கோட்குறிகட்கும் அடைப்புக்குறிகட்கும் முன்னும் பின்னும் வரும் இடைவெளி பொதுவாக ஒரு எழுத்தகலமாகும். ஒரு வாக்கியத்தின் தொடக்கத்தில் வரும் போதும் ஒரு வாக்கியத்திற்கு நேரடியாக முன்பு அமையும் போதும் இரண்டு இடைவெளிகள் பயன்படலாம். இக் குறிகளால் உள்ளடக்கப்படும் சொற்களுக்கும் இக்குறிகட்கும் இடைவெளி அவசியமில்லை. இடைவெளி விடப்பட்டாற், சிலவேளை, ஒரு வரியில் மேற்கோட்குறியும் அடுத்த வரியில் முதலாவது சொல்லும் வரலாம்; அல்லது, இறுதி வார்த்தை ஒரு வரியிலும் இறுதி மேற் கோட்குறி அடுத்த வரியிலும் வரலாம். இது வாசிப்பவருக்கு எவ்வளவு தூரம் வசதியீனமானது என நான் விவரிக்க அவசியமில்லை.

**13. பொது விதி ஒன்று**

தெளிவாக வாசிக்க உதவும் நோக்கிலேயே தரிப்புக்குறிகள் பயன்படுகின்றன. மிக நீளமான வாக்கியங்கள் பெரும்பாலும் வாசிக்கச் சிரமமானவை. அதேவேளை, அடுத்தடுத்து வரும் குறுகிய வாக்கியங்கள் அலுப்பூட்டவும் கூடும். வாக்கியங்களின் அமைப்புப் பற்

றிய தெரிவு எழுத்து நடை தொடர்பான ஒன்றென்பதால், திட்ட வட்டமான விதிகளோ வழிகாட்டல்களோ இல்லை. எவ்வாறாயினும், தரிப்புக்குறிகள் பற்றிய நல்லதோர் பொதுவிதி பின்வருமாறு:

மிகத் திருத்தமான தரிப்புக்குறிப் பிரயோகம் குறைந்தபட்சத் தரிப் புக்குறிகளுடன் தெளிவாக விளங்கக் கூடிய ஒன்றேயாம்.

இவ்விதி விசேடமாகக் குறுந்தரிப்புகட்குப் பொருந்தும். தெளிவான வாக்கிய அமைப்பில்லாமற் தரிப்புக்குறிகள் நமக்கு அதிகம் உதவா என்பதே உண்மை.